செ.வெ. எண்: 255 நாள்: 10.04.2012

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு திரைப்பட தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக சுமூகத் தீர்வு காணும் பொருட்டு இன்று (10.4.2012) மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி.த.செல்லபாண்டியன் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தையில் இருதரப்பினருக்கும் அறிவுரை வழங்கினார்கள். பெப்சி தொழிற்சங்கத்தினர் வேலை நிறுத்தத்தை உடனடியாக கைவிட்டு திரைப்பட சூட்டிங் நடைபெற முழு ஒத்துழைப்பு வழங்கவும், தயாரிப்பாளர் சங்கம் முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவும் அமைச்சர் முன்னிலையில் ஒப்புக் கொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**